# 2

# தமிழ் இணைய அகராதி

**கோ. பழனிராஜன், த. தினகரன், இரஞ்சனி பார்த்தசாரதி, தே.வே. கீதா**

*இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம்,*
*கணினி அறிவியல் தொழில்நுட்பப் பள்ளி,*
*அண்ணா பல்கலைக்கழகம்.*

*palaniworld@rediff.com, dhina_t@yahoo.com, rp@annauniv.edu, tvgeedir@cs.annauniv.edu*

**உள்ளடக்கம்**

தமிழ் இணைய அகராதி என்பது இணையத் தளத்தின் மூலம் தமிழ்ச் சொற்களுக்குரிய சொற் பொருளையும் இலக்கணக்கூறுகளையும் தமிழ் மற்றும் ஆங்கில மொழியின் வழி நாம் கண்டறிய உதவும் ஒரு மென்பொருள் ஆகும்.

இந்த மென்பொருளில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தலைச் சொற்கள் அடங்கியுள்ளது. இவற்றில் ஒரு குறிப்பிட்ட இலக்கணக்கூறுகளில் உள்ள அனைத்துத் தலைச் சொற்களையும் தெரிந்துகொள்ள லாம். ஒரு தமிழ்த் தலைச் சொல்லை உள்ளீடாகக் கொடுத்து மற்றும் உங்களுக்குத் தேவையான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இலக்கணக் கூறுகளை தேர்ந்தெடுத்தால் ஒரு குறிப்பிட்ட இலக் கணக் கூறுகளையும் அல்லது எல்லா இலக்கணக் கூறுகளையும் காணலாம்.

**முக்கிய வார்த்தைகள்**

**உருபனியியல் பகுப்பி, தமிழ் இணைய அகராதி.**

## 1. முன்னுரை

ஒரு மொழியின் அடிப்படை நோக்கம் செய்திப் பரிமாற்றம். செய்திப் பரிமாற்றம் தடையின்றி நடைபெற மொழிச் சொற்களின் பொருள் அறிவு இன்றியமையாதது. பேசுவோர், கேட்போர் இருவருக்கும் உரிய சொல் தொகுதியும் பொருட்சூழல்களும் ஒத்தனவாய் இருக்கும் நிலையில்தான் இப்பரிமாற்றம் முழுமை பெறும். கேட்போர், படிப்போர் சொற்களின் பொருள் சூழலை உணர இயலாதபோது செய்திப் பரிமாற் றத்திலும் இடர்ப்பாடு ஏற்படும். இந்நிலையில் அகராதிகள் இன்றியாமையாதனவாய்த் தேவைப்படுகின் றன. அகராதிகள் காலந்தோறும் பல மாறுதல்களை பெறுகின்றன. ஒரு மொழியில் ஏற்படுகின்ற சிறு மாற்றங்கள் முதல் தொழில்நுட்பப் புரட்சியால் ஏற்படுகின்ற அளப்பறிய மாற்றங்கள் வரை அகராதி கண்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்றைய வளர்ச்சி நிலை ‘‘இணைய அகராதி’’. இந்த இணைய அகராதி தமிழ் மொழியில் எவ்வாறு உருவாக்கப்பட்டு வருகிறது என்பதை, அகராதி, இணைய அகராதி, பயனர் இடைமுகம், அகராதியைப் பயன்படுத்தும் முறை ஆகியவற்றின் வழிச் சுருக்கமாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## 2. அகராதி என்றால் என்ன ?

அகராதியியல் அறிஞர் சுகுஸ்தா [4] ஒரு மேற்கோளை நினைவுக் கூறுகையில் அகராதி என்ற சொல்லுக்குரிய விளக்கங்களில் எனக்குத் தெரிந்த வரையில் நல்லதொரு விளக்கத்தினை அல்லது வரையறையை சி.சி. பெர்ஜ் (C.C. Berg) என்பவர் கொடுத்துள்ளார். குறிப்பிட்ட பேச்சுச் சமூகத்

திலிருந்து சமூகவியப்பட்ட மொழியியல் வடிவங்களை எல்லாம் தொகுத்து முறைப்படுத்திக் கொடுக்கின்ற ஒரு சொல் தொகுதி. தகுதி வாய்ந்த பயன்பாட்டாளன் அல்லது படிப்போன் ஒவ்வொரு தனிச் சொல்லையும் புரிந்துகொள்ளும் வகையில் தொகுத்தவரால் கொடுக்கப்பட்ட விளக்கத்தினை உடையது. அப்பேச்சுச் சமூகத்தில் அச்சொல்லின் செயற்பாடு பற்றிய தொடர்புடைய உண்மைகளைத் தருவது. பொர்ஜின் இந்த விளக்கம் அகராதிகளின் தலைமையான வகைகளோடு தொடர்புடையதாய் உள்ளது என்கிறார்.

### 2.1 அகராதி பற்றிய அகராதிச் சொல்

அகராதி என்ற சொல்லுக்கு அகராதியில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பற்றி மாதையன் [2] பின்வருமாறு கூறுகிறார்.

அகராதி (டிக்ஸ்னெரி) எனும் சொல்லுக்கு ஒரு மொழியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சொற்களை எல்லாம் வழக்கமாய் அகர நிரலில் தந்து அச்சொற்களின் பொருள், ஒலிப்பு முறை, சொற்பிறப்பு, சொல் விரிவு போன்றவை பற்றிக் கொடுக்கப்படும் தகவல்களை ஒரே மொழியிலோ வேறு மொழியிலோ தரும் நூல் என விளக்கம் தந்துள்ளது ரேண்டம் ஹவுஸ் அகராதி.

சொற்களின் எழுத்துமுறை, ஒலிப்பு முறை, பொருள் நுட்பம், பயன்பாடு, ஒருபொருட் பலசொல், ஆக்கச்சொல் வரலாறு போன்றவற்றையோ இவற்றுள் சிலவற்றையோ தெளிவுறுத்தும் பொருட்டு ஒரு மொழியின் தனித்தனிச் சொற்களையோ குறிப்பிட்ட வகைச் சொற்களையோ கையாளுகின்ற நூல் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி.

### 2.2. அகராதியின் வகைகள்

மொழி அகராதிகள் கால அடிப்படையில் வரலாற்று அகராதி, (Diachronic Dictionary) குறித்த கால அகராதி (Synchronic Dictionary) என இரண்டாய் வகைப்படுத்தலாம்.

#### 2.2.1. வரலாற்று அகராதி

வரலாற்று அகராதி அடிப்படையில் வரலாற்றோடு தொடர்புடையன. சொற்களின் வடிவம், அவற்றின் பொருள் எனும் இரண்டின் வளர்ச்சியிலும் அவை வரலாற்றோடு தொடர்புடையன என்கிறார் சுகுஸ்தா [4].

உதாரணம்: சென்னைப் பல்கலைக்கழக அகராதியைக் குறிப்பிடலாம்.

#### 2.2.2. குறித்த காலநிலை அகராதி

ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள சொற்களை மட்டுமே எடுத்துக்கொண்டு பதிவுகளாகத் தருவது குறித்த காலநிலை அகராதி எனப்படும். இந்தத் தமிழ் இணைய அகராதியானது குறித்த காலநிலை அகராதி வகையைச் சார்ந்ததாகும்.

உதாரணம்: க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.

#### 2.2.3. மொழி அகராதி

அகராதியில் இடம்பெறும் மொழி எண்ணிக்கை அடிப்படையில் அவற்றை ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி எனப் பொதுவாக வகைப்படுத்தலாம்.

##### 2.2.3.1. ஒருமொழி அகராதி

தலைச் சொல்லுக்கு (Head Word) தலைச் சொல்லின் மொழியிலேயே பொருள் விளக்கம் தரும் அகராதிகள் ஒருமொழி அகராதிகள்.

உதாரணம் : தமிழ்–தமிழ்–அகரமுதலி.

#### 2.2.3.2. இருமொழி அகராதி

தலைச் சொல்லுக்கு வேறு பிற மொழியில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் இரு மொழி அகராதிகள் எனப்படுகின்றன.

உதாரணம்: க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.

#### 2.2.3.3. பன்மொழி அகராதி

தலைச் சொல்லுக்கு இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் பன்மொழி அகராதிகள்.

உதாரணம்: இலத்தீன்–பிரெஞ்சு–தமிழ் அகராதி.

மேற்கண்ட மொழி அகராதிகளில் இந்த இணைய அகராதி இருமொழி அகராதி வகையைச் சார்ந்த தாகும். தமிழ் – ஆங்கிலம் என்ற மொழி அமைப்பில் தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தலைச் சொல் தமிழிலும் பொருட்சொல் ஆங்கில மொழியிலும் தரப்பட்டுள்ளன.

## 3. இணைய அகராதி

இணைய அகராதி என்பது பொதுவாக உருவாக்கப்பட்ட ஓர் அகராதியை இணையத் தளத்துடன் இணைத்து கணினி மூலம் தரவுகளைப் பெறுவது.

இணைய அகராதி என்பது ஆங்கிலத்தில் ஆன்லைன் அகராதி (online dictionary) என்று பொருள். இந்த ஆன்லைனுக்கு இணையாகத் தமிழில் கலைச் சொற்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அவை உடன்நிகழ், தொடரறா, நேர்முகம், நேரடி, இணையம், என்பன. எளிமையும் பயனும் கருதி இணையம் என்ற கலைச் சொல்லைத் தேர்ந்தெடுத்து உள்ளோம்.

### 3.1. தமிழ் இணைய அகராதி

தமிழ் இணைய அகராதியானது சென்னைப் பல்கலைக்கழக அகராதி மற்றும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தமிழ் இணைய அகராதிக்கு 'மதுரம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த அகராதி இணைய பயன்பாட்டாளர்கள் பயன்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட ஒரு மென்பொருளாகும்.

இதில் ஒரு தமிழ் தலைச் சொல்லை உள்ளீடாகக் கொடுக்கும்போது அதனுடைய தமிழ் இலக்கணக் கூறுகளையும், அத்தலைச் சொல்லிற்கு இணையான ஆங்கிலப் பொருளையும் கொடுக்கும். இது போன்று ஆங்கிலப் பொருளை உள்ளீடாகக் கொடுத்தால் அதற்கு இணையான தமிழ் தலைச் சொல்லையும் அதன் இலக்கணக் கூறுகளையும் கொடுக்கும். இந்த மென்பொருளானது எல்லா வகையான தளங்களிலும் (platform) பயன்படுத்தக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இந்த இணைய அகராதியானது ஜாவா மற்றும் ஜே.எஸ்.பி. என்ற கணினி மொழிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.2 இணைய அகராதியின் பயன்பாடு

மதுரம் இணைய அகராதியில் ஒரு குறிப்பிட்ட இலக்கணக் கூற்றின் எண்ணிக்கையையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இலக்கணக் கூறுகளின் கூட்டு எண்ணிக்கையையும் அறியலாம். மேலும் முதல் மற்றும் கடைநிலை எழுத்துகளை உள்ளீடாகக் கொடுத்து இதற்கு இடையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்கள் வருமாறு உள்ள தமிழ்ச் சொற்களின் சொற்பொருளையும், இலக்கணக் கூறுகளையும் அறியலாம்.

### 3.3 தமிழ் இணைய அகராதியின் தனிச்சிறப்பு

மதுரம் இணைய அகராதியில் பதினைந்து இலக்கணக் கூறுகள் உள்ளன.


அவை: 1. பெயர், 2. வினை, 3. பெயரடை, 4. வினையடை, 5. துணைவினை,

6. சொல்லுருபு, 7. இடைச் சொல், 8. இணைப்பு இடைச் சொல், 9. விளிப்பு இடைச் சொல்,

10. சுட்டுப் பெயர், 11. சுட்டுப் பெயரடை, 12. எதிர்மறை வினைமுற்று, 13. வினாப் பெயர், 14. வினாப் பெயரடை, 15. வினைமுற்று முதலியன.

இந்த மென்பொருளில் உருபனியியல் பகுப்பி என்ற மென்பொருள் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதன் பணியானது ஒரு தலைச் சொல் அல்லாத ஒரு தமிழ்ச் சொல்லை உள்ளீடாகக் கொடுத்தால் அதனுடைய தலைச் சொல்லைக் கண்டறிந்து வெளியீடாகக் கொடுக்கும். இந்தத் தலைச் சொல்லைக் கொண்டு நமக்குத் தேவையான வெளியீட்டைப் பெறலாம். இந்த அகராதியில், எந்த வகையான சொல்லையும் (தலைச் சொல் அல்லது தலைச் சொல் அல்லாத சொல்) உள்ளீடாகக் கொடுக்க முடியும். மேலும் சொல்லுருபு என்னும் இலக்கணக் கூற்றுடன் உலா வரும் ஒரே இணைய அகராதி என்ற பெருமை இதற்கு உண்டு.

## 4. பயனர் இடைமுகம்




படம் (1)

இந்த மென்பொருளில் உள்ள பதினைந்து இலக்கணக் கூறுகளை இரண்டாகப் பிரித்து முதல் ஐந்து இலக்கணக் கூறுகள் முக்கிய இலக்கணக் கூறுகளாகவும் அதற்குப் பின்வருவன துணை இலக்கணக் கூறுகளாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மென்பொருளில் உருபனி யியல் பகுப்பியின் வெளியீட்டுப் பகுதி தனி வெளியீடாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. ஒரு சொல்லின் திரிபு வடிவத்தை உள்ளீடாகக் கொடுத்தால் அச்சொல் திரிபு வடிவத்தைத் தனியாகப் பிரித்து அதன் தலைச் சொல்லிற்கான இலக்கணக் கூறும் பொருளும் கிடைக்கும். திரிபு வடிவம் தனியாகவும் பிரிக்கப்பட்டு மேலே உள்ள படத்தில் உள்ளது போல் (அழகான = அழகு + ஆன) வெளியீடு கிடைக்கும். இந்த மென்பொருள் வெளியீட்டு அமைப்பானது உள்ளீட்டுப் பகுதி, உருபனியியலின் வெளியீட்டுப் பகுதி மற்றும் தமிழ் இணைய அகராதியில் வெளியீட்டுப் பகுதி என மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

### 4.1 இணைய அகராதியைப் பயன்படுத்தும் முறை

ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய சொற்களைத் தேடுதல்:

தேடவேண்டிய சொற்களின் முதல் எழுத்தோடு இந்த '*' குறியீட்டைச் சேர்த்து உள்ளீடாகக் கொடுக்க வேண்டும்.

உதாரணம்:

ஆ* என்று உள்ளீட்டைக் கொடுத்தலால் (ஆக்கம், ஆக்கப்பூர்வம், ஆக்கவினை) .... என்று 'ஆ'–வில் ஆரம்பிக்கும் அனைத்துத் தலைச் சொற்களின் சொற்பொருள்களையும் கீழே உள்ள படம் (1)–ல் உள்ளது போல் வெளியீடாகக் கொடுக்கும்.



படம் (1)

2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய சொற்களைத் தேடுதல்:


தேடவேண்டிய சொற்களில் முதல் எழுத்தோடு இந்த '?' குறியீட்டைச் சேர்த்து உள்ளீடாகக் கொடுக்க வேண்டும்.

உதாரணம்:

'இ?' என்று உள்ளீட்டைக் கொடுத்தால் இது, இர, இழ என்னும் 'இ'–யில் ஆரம்பித்து ஒரு எழுத்தில் முடியும் அனைத்துத் தலைச் சொற்களையும் கீழே உள்ள படம் (2)–ல் உள்ளது போல் வெளியீடாகக் பெறலாம். இதே போல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்த்தைகளையும் இதன் மூலம் தேடலாம்.

உதாரணம்:

'அ??' என்ற உள்ளீட்டைக் கொடுத்தால் அஃகு, அகம், அறம் என்று 'அ'–வில் ஆரம் பித்து இரண்டு எழுத்தில் முடியும் அனைத்துத் தலைச் சொற்களையும் அறியலாம்.




படம் (2)

3. இடையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய சொற்களைத் தேடுதல்:

தேடவேண்டிய சொற்களின் முதல் மற்றும் இறுதி எழுத்துக்களின் நடுவில் '*' என்ற குறியீட்டை சேர்த்துக் கொடுத்தால் இரண்டுக்கும் நடுவில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் அமைந்த சொற்களை வெளியீடாகப் பெறலாம்.

உதாரணம்:

'அ*ம்' என்ற உள்ளீட்டைக் கொடுத்தால் (அகம், அக்கம், அகங்காரம்) என்று 'அ' வில் ஆரம்பித்து 'ம்'–இல் முடியும் தலைச்சொற்களின் பொருளை அறியலாம்.

தேடவேண்டிய சொற்களின் முதல் மற்றும் கடை நிலை எழுத்துகளின் நடுவில் **'?'** என்ற குறியீட்டை சேர்த்துக் கொடுத்தால் இரண்டு எழுத்துகளின் நடுவில் ஒரு எழுத்து உள்ள சொற்களைப் பெறலாம்.


மேலே கூறியதைப் போன்று தேடவேண்டிய சொற்களின் முதல் மற்றும் கடை நிலை எழுத்துகளின் நடுவில் **'??'** என்ற குறியீட்டை சேர்த்துக் கொடுத்தால் இரண்டு எழுத்துகளின் நடுவில் இரண்டு எழுத்து உள்ள சொற்களைப் பெறலாம்.

உதாரணம்:

'ம**?**ம்' என்ற உள்ளீட்டைக் கொடுத்தால் (மரம், மதம், மலம்) என்று 'ம'–வில் ஆரம்பித்து 'ம்'–இல் முடியும் மூன்று எழுத்துகளைக் கொண்ட தலைச் சொற்களின் பொருளை அறியலாம்.

உதாரணம்:

'ம**??**ம்' என்ற உள்ளீட்டைக் கொடுத்தால் (மகரம், மகுடம், மரணம்) என்று 'ம'–வில் ஆரம்பித்து 'ம்'–இல் முடியும் நான்கு எழுத்துகளைக் கொண்ட தலைச் சொற்களின் பொருளை கீழே உள்ள படம் (3)–ல் உள்ளது போல் காணலாம்.




படம் (3)

### 4.2 தேடல் வகை

| தேடல் வகை | அமைப்பு | தீர்வு |
|---|---|---|
| மத்தியில் தேடுதல் | அ*ம் | அகம், அறம், அடம், அப்பம் |
| இறுதியில் தேடுதல் | அக* | அகம், அகத்தை, அகப்பை |
| மத்தியில் ஓர் எழுத்தைத் தேடுதல் | அ?ம் | அகம், அறம், அடம் |
| இறுதியில் ஓர் எழுத்தைத் தேடுதல் | அ? | அக, அடி, அழு |
| இறுதியில் இரண்டு எழுத்தைத் தேடுதல் | அ?? | அகம், அறம், அஞ்சு |

### 5. தலைச் சொல்லைத் தேடுதல்

இதில் நமக்குத் தேவையான தமிழ் தலைச் சொல்லையோ ஆங்கிலச் சொல்லையோ உள்ளீடாகக் கொடுத்தால் அச்சொல்லிற்கான தமிழ் தலைச் சொல், இலக்கணக் கூறு, சொற்பொருள் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியில் அச்சொல்லிற்கான சொற்பொருளையும் அறியலாம்.

உதாரணம்:

அம்மா என்ற உள்ளீட்டைக் கொடுத்தால்

அம்மா1 பெயர்

1. பெற்றோரில் பெண்; தாய்.
2. திருமணமான பெண்ணைக் குறிப்பிடும் மரியாதைச் சொல்.
3. பெண் என்பதை உணர்த்துவதற்கு இணைக்கப்படும் சொல்.

1. mother.
2. a term of respect especially to refer mostly to a married woman.
3. a word added to indicate that the person is a woman.

அம்மா2 இடைச்சொல்

வலியால் துன்புறும்போது அல்லது ஆச்சரியப்படும்படியான ஒன்றைக் காணும்போது கூறும் ஒரு சொல்.

an expression of pain or surprise.

என்ற வடிவில் வெளியீட்டைக் கொடுக்கும்.

### 6. இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் தேடல்

இந்த மென்பொருளில் பதினைந்து வகையான இலக்கணக் கூறுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நமக்குத் தேவையான இலக்கணக் கூறுகளை மட்டும் தேர்ந்தெடுத்து அதில் அடங்கியுள்ள தேவை யான அல்லது அனைத்துத் தலைச் சொற்களின் சொற்பொருள்களையும் இலக்கணக் கூறுகளையும் அறியலாம். மேலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இலக்கணக் கூறுகளைத் தேர்ந்தெடுத்து அதில் அடங்கியுள்ள தேவையான அல்லது அனைத்துத் தலைச் சொற்களின் சொற்பொருள்களையும் இலக்கணக் கூறுகளையும் கண்டறியலாம்.




படம் (4)

### 7. முடிவுரை

மதுரம் இணைய அகராதியானது தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரிந்த அனைவருக்கும் பயன்படும் வகை யில் அமைந்துள்ளது. இது தமிழ் மொழி பேசும் மக்களுக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக் கும் பயன்படும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆய்வாளர்களுக்கும் மொழிபெயர்ப்பாளர் களுக்கும் மொழியியல் வல்லுநர்களுக்கும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மதுரம் இணைய அகராதியானது ஜாவா, ஜே.எஸ்.பி. என்னும் கணினி மொழிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இது எல்லா வகையான தளங்களிலும் தடங்கல் இல்லாமல் வேலைச் செய்ய முடியும். இந்த அகராதியில் உருபனியியல் பகுப்பி பயன்படுத்தப்படுவதால் தலைச் சொல் அல்லாத சொல்லை உள்ளீடாகக் கொடுக்கும்போது அது அதனைப் பிரித்து ஆய்ந்து தலைச் சொல்லை வெளியீடாகக் கொடுக்கிறது. இந்த வெளியீட்டைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான இலக்கணக் கூறுகளையும் சொற் பொருளையும் பெறலாம். இந்த இணைய அகராதியானது மொழியிய லாருக்குப் பயன்படும்படியும் அமைக்கப்பட்டுள்ளது இதனுடைய மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

இதில் நமக்குத் தேவையான இலக்கணக் கூறுகளின் எண்ணிக்கையும் சொற்பொருள்களையும் தனி யாகத் தெரிந்துகொள்ள ஏதுவாக உருவாக்கப்பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும். இனி வரும்

காலத்தில் இதனுடைய துணை இலக்கணக் கூறுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் இதனுடைய தரவுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் தரவுத் தளத்தை மாற்றவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

துணை நூல் பட்டியல்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 1992. பா.ரா. சுப்பிரமணியன், (மு.ஆ),

சென்னை: க்ரியா.

2. மாதையன், பெ. 1997. அகராதியியல் தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

3. Tamil Lexicon. 1924 39 Six Volumes and Supplement Madras: University of Madras.

4. Zgusta, L., et, al., 1971. Manual of Lexicography, Mouton: The Hague.